**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்போரூர்</u>**

**<u>DEPOSITION OF WITNESSES</u>**

(Chapter XXIII Cr.P.C)

**CC NO.52/2022**

**PW.4**

**Date: 21.06.2025**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.லியோபிரான்சிஸ் | சாதி | |
| கணவர்/தந்தை பெயர் | பன்னீர்செல்வம் | மதம் | |
| கிராமம் | கடலாடிகுளம் | தொழில் | |
| வட்டம் | விழுப்புரம் | வயது | 41 |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969, (Central Act 44 of 1969) on the **21th June 2025**

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

எதிரி ஆஜர்

**<u>முதல் விசாரணை :</u>**

1. நான் தற்போது கையில் அடிப்பட்டதால் வேலைக்கு செல்லாமல் வீட்டில் தான் உள்ளேன். அ.சா. 1 என் மனைவி. அ.சா. 2 மற்றும் அ.சா. 3 ஆகியோர் என் பிள்ளைகள். கடந்த 6 ஆண்டுகளுக்கு முன்பாக அ.சா. 2 மற்றும் அ.சா.3 ஆகியோர் கோவளம் விடுதியில் தங்கி படித்து வந்தார்கள். என் சின்னமகன் சின்னப்பராஜ்க்கு ஏதே தப்பு

செய்ததாக அந்த விடுதியின் காப்பாளராக ஆஜர் எதிரி மின்சார உபகரணத்தை கொண்டு சூடு வைத்ததாக அ.சா. 3 என் மனைவிக்கு தகவல் சொன்னார்.

2. நான் அன்று மாலை வீட்டிற்கு வந்தவுடன் என்மனைவி அந்த விவரத்தை சொன்னார். நாங்கள் அன்று மாலை விடுதிக்கு சென்றோம். இரு கைகளிலும் மருந்து தடவப்பட்டு அ.சா. 2 உட்காரவைத்து இருந்தார். என் மகன் செல்போன் திருடியதாக ஆஜர் எதிரி அடித்ததாக சொன்னார்கள். அதன்பின்னர் விளையாட்டுதனமாக பன்னிராண்டாம் வகுப்பு படிக்கும் மாணவர்கள் தான் யாரோ மறைத்து வைத்து இருந்ததாகவும் அதை தெரியாமல் அ.சா. 2 ஐ எதிரி தாக்கியதாக சொன்னார்கள். நாங்கள் சென்றபோது எதிரியோ சர்ச் போதகரோ யாரும் இல்லை. நாங்கள் அ.சா. 2 மற்றும் அ.சா. 3 ஆகியோரை அழைத்து வந்து விட்டோம். நாங்கள் செட்டிநாடு மருத்துவமனைக்கு சென்று விட்டோம். அங்கு இருந்து போலிசாருக்கு தகவல் தெரிவித்ததின் பேரில் போலிசார் அங்கு வந்து எங்களை அழைத்து சென்றார்கள்.

3. அதன்பின்னர் காவல் நிலையத்தில் அ.சா. 1 புகார் கொடுத்தார். அதன்பின்னர் 3 நாட்கள் கழித்து விடுதிக்கு சென்று எனது பிள்ளைகளின் பொருட்களை எடுத்து கொண்டு ஊருக்கு சென்று விட்டோம். போலிசார் இந்த வழக்கு சம்பந்தமாக என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>** –

4. சம்பவம் சம்பந்தமாக யார் எனக்கு தகவல் சொன்னது என்றால் அ.சா. 3 என் மனைவிக்கு தகவல் சொல்லி உள்ளார். எனக்கு 6 மணிக்கு தான் தகவல் தெரிந்தது. சம்பவ நாள் அன்று நான் எங்கு வேலை செய்து கொண்டு இருந்தேன் என்றால் கஞ்சன்சாவடியில் வேலை செய்து கொண்டு இருந்தேன். என் மகன் அ.சா. 2 என் மனைவிக்கு மாலை 6 மணிக்கு தகவல் சொல்லிருப்பார் என்றாலும் அதனால் தான் என் மனைவியும் எனக்கு மாலை 6 மணிக்கு தகவல் சொல்லிருப்பார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது என் மனைவி எனக்கு 6 மணிக்கு தான் தகவல் சொன்னார்.

5. அந்த விவரம் தெரிந்தவுடன் யார் யார் எத்தனை மணிக்கு விடுதிக்கு சென்றோம் என்றால் நானும் என் மனைவியும் மட்டும் மதான் சொன்றோம்,நேரம் நினைவு இல்லை. நாங்கள் விடுதிக்கு சென்று முதலில் யாரை சந்தித்தோம் என்றால் அ.சா. 2 ஐ தான் முதலில் பார்த்தோம். அ.சா. 2 உடன் எத்தனை பேர் இருந்து இருப்பார்கள் என்றால் பிள்ளைகள் 10 பேர் இருந்து இருப்பார்கள். அங்கு இருந்த பிள்ளைகளிடம் சம்பவ குறித்து விசாரித்தேனா என்றால் அ.சா. 2 செல்போன் எடுக்கவில்லை என்றும் அவர் அங்கு சென்று விளையாடியதால் அவர் தான் திருடியதாக தாக்கப்பட்டார் என்று சொன்னார்கள். அந்த தேதி எனக்கு நினைவு உள்ளதாக என்றால் நினைவு இல்லை. நான் விடுதி சென்றபோது எதிரி அங்கு இருந்தாரா என்றால் இல்லை.

6. அ.சா. 2 ஐ பின்பு எங்கு அழைத்து சென்றோம் என்றால் மற்றொரு காப்பாளரிடம் அழைத்து சென்றோம். அ.சா.2 என்னிடம் என்ன சொன்னார் என்றால் எதுவும் சொல்லவில்லை. அ.சா.2 தன்னை தாக்கியது குறித்தும் சூடுவைத்தது குறித்தும் என்னிடம் சொன்னரா என்றால் நான் விசாரித்தபிறகு என்னிடம் சொன்னார். நான் அ.சா. 2 ஐ விசாரித்தபோது எதுவும் சொல்லவில்லை என்று சொல்லிவிட்டு தற்போது அதற்கு முரணாக மாற்றி சாட்சியம் அளிக்கிறேனா என்றால் நாங்கள் முதலில் விசாரிப்பதற்குள் அவரை அ.சா. 1 விடுதி காப்பாளரிடம் அழைத்து சென்றுவிட்டதால் அப்போது அவர் எதுவும் சொல்லவில்லை. அதன் பின்னர் நடந்த விவரங்களை சொன்னார்.

7. அ.சா. 2 எதிரி தன்னை தாக்கியதாக சொல்லவில்லை என்றால் சரியல்ல சொன்னார். நாங்கள் அ.சா. 2 ஐ மருத்துவமனைக்கு அழைத்து செல்வதற்கு முன்பாக காவல் நிலையம் சென்றுவிட்டு தான் மருத்துவமனை சென்றோம் என்றால் சரியல்ல. எங்களுடன் யாரெல்லாம் மருத்துவமனைக்கு வந்தார்கள் என்றால் நானும் என் மனைவியும் தான் சென்றோம். விடுதியில் அனுமதி பெற்று அ.சா. 2 ஐ அழைத்து சென்றோமா என்றால் இல்லை. என்னுடைய பிள்ளைகள் மாதத்தில் எத்தனை முறை எங்களுக்கு போன் செய்வார் என்றால் வாரத்தில் இரண்டு, மூன்று முறை பேசுவோம். காவல் நிலையத்திற்கு எத்தனை பேர் சென்றோம் என்றால் நான் மனைவி மற்றும் என்னுடைய சகோதரர்கள் வந்து இருந்தார்கள்.

8. சம்பவ நடந்த அன்றே புகார் கொடுத்தோமா என்றால் இல்லை. 3 நாட்கள் கழித்து தான் புகார் கொடுத்தோம். நான் சம்பவத்தை நேரில் பாக்கவில்லை என்றாலும் அ.சா. 1

சொன்ன தகவல் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் நானும் என் மகனை பார்த்தபின்னர் தான் புகார் கொடுத்தேன். நான் சாட்சியம் அளித்தது போன்று சம்பவம் நடக்கவில்லை என்றாலும் வழக்கிற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை

S/d– K.Nilavarasan, 21.06.2025
District Munsif cum Judicial Magistrate,
Thiruporur.

**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்போரூர்</u>**

**<u>DEPOSITION OF WITNESSES</u>**

(Chapter XXIII Cr.P.C)

**CC NO.52/2022**

**PW.3**

**Date: 21.06.2025**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.சகாயராஜ் | சாதி | |
| கணவர்/தந்தை பெயர் | லியோபிரான்சிஸ் | மதம் | |
| கிராமம் | கடலாடிகுளம் | தொழில் | |
| வட்டம் | விழுப்புரம் | வயது | 20 |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969, (Central Act 44 of 1969) on the **21th June 2025**

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.
எதிரி ஆஜர்

**<u>முதல் விசாரணை :</u>**

1. நான் ஏசி மெக்கானிக்காக வேலை செய்கிறேன். அ.சா. 2 என்னுடைய தம்பி. அ.சா. 1 என்னுடைய அம்மா. கடந்த 2018 ஆம் ஆண்டு கோவளத்தில் உள்ள சென்ஜோசப் மேல்நிலைபள்ளியில் உள்ள விடுதியில் தங்கி நானும் என் தம்பி அ.சா. 2 ம் படித்து வந்தோம். நான் 7 ஆம் வகுப்பு படித்தேன்.அ.சா. 2 ஆறாம் வகுப்பு படித்தார். ஆஜர் எதிரி

நான் தங்கி படித்த விடுதியில் காப்பாளராக பணி செய்து வந்தார். கடந்த 13/04/2018 அன்று விடுதியில் இருந்த ஒரு மாணவரின் செல்போன் காணவில்லை என்று சொன்னார்கள்.

2. என்னுடைய தம்பி அ.சா 2 ஐ காணவில்லை. நாங்கள் விடுதி முழுவதும் தேடினோம். அவன் இல்லை. ஆஜர் எதிரியின் அறையிலும் நான் தேட சென்றபோது ஆஜர் எதிரி கதவை திறந்து என் தம்பி இல்லை என்று சொல்லிவிட்டார். இரண்டு நாட்களாக என் தம்பியை காணவில்லை. இந்நிலையயில் எதிரி ஊருக்கு சென்று விட்டார். அதன்பின் அங்கு தங்கி இருந்த ஒரு மாணவர் ஆஜர் எதிரியின் அறையில் தான் என் தம்பி இருப்பதாக சொன்னார். அதன்பின்னர் நாங்கள் அனைவரும் சென்று என் தம்பியை அழைத்து வந்து விட்டோம். என் தம்பியின் இரண்டு கைகளிலும் நான்கு இடங்களில் சூடு வைக்கப்பட்டு இருந்தது. இடது கண்ணின் அருகில் சூடு போன்று தீ காயம் காணப்பட்டது.

3. அதன்பின்னர் சர்ச் போதகர் மற்றும் மற்றொரு காப்பாளரிடம் அந்த விவரங்களை சொன்னோம். அவர்கள் எங்கள் வீட்டிற்கு தகவல் சொல்ல சொன்னார்கள். விடுதியில் இருந்த சில மாணவர்களிடம போன் கேட்டோம். அவர்கள் கொடுக்கவில்லை. அதன் பின்னர் சர்ச் அருகே கிரிக்கெட் விளையாட வந்த ஒருவரிடம் போன் வாங்கி எனது வீட்டிற்கு தகவல் சொன்னேன். அதன் பின்னர் என் அம்மாவும் என் அப்பாவும் விடுதிக்கு வந்து என்னையும் என் தம்பியையும் கேளம்பாக்கம் காவல் நிலையம் அழைத்து சென்றார்கள். என் அம்மா காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்.

4. அதன் பின்னர் அங்கு இருந்து செட்டிநாடு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். போலிசார் அ.சா. 2 ஐ எதிரி எந்த ஆயுதத்தால் தாக்கினார்கள் என்று கேட்டார்கள். மறுநாள் என்னுடன் போலிசார் வந்தார்கள். எதிரி என் தம்பியை தாக்க பயன்படுத்திய மூங்கில் கொம்பில் செலோடேப் ஒட்டப்பட்டு உடைந்து குப்பை தொட்டியில் கிடந்தது. எதிரி என் தம்பிக்கு சூடு வைக்கப்பயன்படுத்திய மின்சார ஒட்டும் கன்போன்ற பொருளை எதிரியின் மேசை டாயர்லிருந்து எடுத்து கொடுத்தேன். அதன்பின்னர் மீண்டும் சம்பவ சம்பந்தமாக புகார் கொடுக்க சொன்னார்கள். என் அம்மா புகார் கொடுத்தார். விடுப்பு முடிந்து எதிரியை போலிசார் கைது செய்தார். போலிசார் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u> –

5. சம்பவ எப்போது நடந்து என்றால் 13/04/2018 அன்று நடந்தது. கிழமை நினைவு இல்லை. அன்றைய தினம் காலை இருந்த நான் என்ன செய்து இருந்தேன் என்றால் என் தம்பியை தான் தேடிக்கொண்டு இருந்தேன். எங்கள் விடுதியில் எத்தனை அறைகள் உள்ளது என்றால் 4 அறைகள் உள்ளது. நாங்கள் எந்த அறையில் இருப்போம் காப்பாளர் எந்த அறையில் இருப்பார் என்றால் எங்கள் அறை மேலே உள்ளது. காப்பாளர் அறை கீழ் தளத்தில் உள்ளது. எதிரியின் அறை எங்கள் அறைக்கு அருகில் உள்ளது. எங்கள் அறையில் எத்தனை பேர் தங்கி இருப்போம் என்றால் நினைவு இல்லை. நான் எந்த நாளிலிருந்து எந்த நாள் வரை அ.சா. 2 ஐ தேடி கொண்டு இருந்தேன் என்றால் 13/04/2018 முதல் 15/04/2018 வரை தேடிக்கொண்டு இருந்தேன்.

6. நான் 15/04/2018 அன்று தான் அ.சா. 2 ஐ கண்டுப்பிடித்தேன் என்றால் சரிதான். 13/04/2018 முதல் 15/04/2018 வரை எதிரி அங்கு தான் இருந்தார் என்றால் சரிதான். எங்கள் விடுதியில் வருகை பதிவேடு பதிவுசெய்வார்கள் என்றால் முதல் 3 நாட்கள் பதிவு செய்தார்கள் அதன் பின்னர் நான் சரியாக கவனிக்கவில்லை. எனது தம்பியை காணவில்லை என முதல் நாள் தெரிந்த உடன் யாரிடம் அந்த தகவலை தெரிவித்தேன் என்றால் போதகரிடம் தெரிவித்தேன். அது குறித்து போதகர் என்ன நடவடிக்கை எடுத்தார் என்றால் என் தம்பியை தேடி பார்க்கும்படி சொன்னார். என் தம்பியை தேடிபார்த்து அவர் காணவில்லை என தெரிந்த உடன் அதை போதகரிடம் தெரிவித்தேனா என்றால் தெரிவித்தேன்.

7. அதன் பின்னர் போதகர் என்ன சொன்னார் என்றால் கடற்கரை பக்கம் சென்று தேடும்படி சொன்னார். இந்த சம்பவம் நடைப்பெறுவதற்கு முன்பாக அ.சா. 2 ஐ எப்போது கடைசியாக பார்த்தேன் என்றால் அதே நாள் இரவு எனது அறையில் துாங்கும்போது பார்த்தேன். 3 நாட்கள் தேடியபிறகு எப்போது அ.சா. 2 ஐ கண்டுபிடித்தேன் என்றால் 3 வது நாள் மதியம் பிள்ளைகள் சொன்னபிறகு தான் சென்று பார்த்தேன். நான் எங்கு சென்று என் தம்பியை பார்த்தேன் என்றால் ஆஜர் எதிரியின் அறையில் கட்டில் அருகில் படுத்து கொண்டு இருந்தார். நான் சென்று பார்த்தபோது எதிரியும் அங்கு தான் இருந்தார் என்றால் இல்லை. என் பெற்றோருக்கு எவ்வாறு தகவல் தெரிவித்தேன் என்றால் அன்று மாலை கிரிக்கெட் விளையாட வந்த அண்ணங்களிடம் இருந்து போன் வாங்கி என் அம்மாவிற்கு தகவல் தெரிவித்தேன்.

8. அன்று தேதி நினைவு இல்லை. மாலை 5.30 மணி இருக்கும். அருகில் கிரிக்கெட் விளையாட வருபவர்கள் அவர்கள் தினமும் கிரிக்கெட் விளையாட வருவார்களா என்றால் ஆமாம். ஏன் முதல் நாள் அன்றே நான் அவர்களிடம் போன் வாங்கி என் அம்மாவிற்கு தகவல் சொல்லவில்லை என்றால் முதல் இரண்டு நாட்கள் அவர்கள் வரவில்லை. நான் போன் வாங்கிய அந்த நபர் நன்கு அறிமுகம் ஆகியவர் என்றால் சரிதான். அவர் பெயர் எனக்கு நினைவு இல்லை. நான் 5.30 மணிக்கு என் அம்மாவிற்கு தகவல் சொன்னேன். நான் தகவல் கொடுத்தபின்னர் யார் யார் விடுதிக்கு வந்தார்கள் என்றால் என் அம்மா, அப்பா வந்தார்கள்.

9. அவர்கள் யாரை முதலில் பார்த்தார்கள் என்றால் என் தம்பியை தான் முதலில் பார்த்தார்கள். நான் என் தம்பியை பார்த்தபிறகு நான் என்ன செய்தேன் என்றால் என் தம்பியை நான் சென்று பார்த்தபோது படுத்து கொண்டு இருந்தார். மிகவும் சோர்வாக இருந்தார்கள் கை கால் எரிவதாக சொன்னார். மாணவர்கள் நாங்கள் அழைத்துவந்து கட்டிலில் படுக்கவைத்தோம். அவர் அடைத்து வைக்கப்பட்டு இருந்த 3 நாட்களும் அவர் உணவு அருந்தினாரா பாத்ரூம் சென்றாரா குறித்த எதையும் நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். என்னுடைய போலிசார் விசாரணையில் 13/04/2018 அன்று இரவு எதிரி எங்கள் அறைக்கு வந்து அ.சா.2 ஐ தூக்கி கொண்டு சென்றதாக சொல்லியுள்ளேன் என்றால் நினைவு இல்லை.

10. என் தம்பி திருடியதாக சொல்லப்படும் மொபைல் யாருடையது என்றால் அவர் பெயர் சேவாக். போலிசார் விசாரணையில் எதிரி அவருடைய செல்போனை எங்கு வைத்துள்ளாய்

என்று கேட்டு என் தம்பியை தூக்கி சென்றதாக சொன்னேனா என்றால் இல்லை. நாங்கள் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்து பின்னர் தான் மருத்துவமனை சென்றோம் என்றால் சரிதான். எத்தனை நாட்கள் அ.சா. 2 மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார்க என்றால் அன்றைய தினம் 2 மணிநேரம் சிகிச்சையில் இருந்தார்.மறுநாள் சிகிச்சைக்கு சென்றோம். 15/04/2018 அன்று தான் சிகிச்சை பெற்றோம் என்றால் சரிதான். அன்றைய தினம் தான் என் அம்மா காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான்.

11. எதிரி என் தம்பியை அடைத்து வைத்து இருந்த 3 நாட்களும் அவரை எதிரி தாக்கி சூடு வைத்ததை நான் நேரில் பாக்கவில்லை என்றால் சரிதான். நான் என் தம்பியை எதிரி அடைத்து வைத்து தாக்கியதாக சொல்லியதை எதையும் நேரில் பாக்கவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை

S/d- K.Nilavarasan, 21.06.2025
District Munsif cum Judicial Magistrate,
Thiruporur.